# காமராசர்

பூத்துக் குலுங்கிக் கொண்டிருக்கும் இந்த புத்தம்புது காலையில் அலைகடல்களே திரண்டு வந்து அடித்தாலும் அசையாமல் நிற்கும் மலைப்போன்ற நம் குழுத்தலைவர் அவர்களுக்கும், அந்த மலையின் வீழ் அருவியாகத் திகழும் நம் தாளாலர் அவர்களுக்கும், அந்த மலையின் அருகிலிருக்கும் மடுகள் போன்று துணை நிற்கும் முதல்வர் அவர்களுக்கும், அந்த மலையைச் சுற்றியுள்ள மரம், செடிகள் போன்று உள்ள நம் ஆசிரியர்கள் அனைவருக்கும் அந்த இயற்கையில் கிடைக்கும் பசுமைப்போன்று செழிப்பாக இருக்கும் நம் மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் என் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் பேசவிருப்பதோ கர்மவீரர் காமரசர் அவர்களைப் பற்றி. அவரின் இளமை வாழ்க்கையோ தீயில் சிக்கிக்கொண்ட புழுபோன்றது. அவரின் சிறப்போ வெறும் காகிதத்தில் எழுதுவது எவ்வாறு நூலாகிறதோ அதேபோல் கல்விப் படிப்பு என்னும் 5-ஆம் வகுப்பிற்குமேல் படிக்காத, **படிக்காத மேதை** ஆனால் இவரின் வாழ்க்கை வரலாறோ கல்வி பாடமாக பள்ளி நூல்களிலும், வரலாற்று நூல்களிலும் இடம்பெற்றுள்ளது.

அப்படியென்றால் கொஞசம் சிந்தியுங்கள். இவரோ ஏழ்மைப்பட்ட குடும்பத்தில் பிறந்தவர். இளமையில் தந்தையை இழந்ததால் குடும்ப வாழ்க்கை இவருக்கு சுமையானது. ஆகையால் கல்வி தடைபட்டது. தடைப்பட்டாலும், உடைப்பட்டாலும் சிற்பியின் கையில் செதுக்கப்படும் கல்தான் சிலையாவதுபோல் கர்ம வீரர் காமராசர் வாழ்க்கையில் அடிபட்டார். **தலைவரானார்.**

அன்னப்பறவை எவ்வாறு தண்ணீரையும், பாலையும் பிரிக்குமோ அதேப்போல் இவரும், சரி எது தவறு எது என்பதைப் பிரித்துக்காட்டுவதில் வல்லவர்.

“இளங்கன்று பயமறியாது” என்ற தொடருக்கேற்றவர் இவரே.

இளம்வயதில் வீரதீரச் செயல்களையும் நிகழ்த்தியுள்ளார். தேனடையில் தேனீக்கள் எவ்வாறு தேனீக்கள் எவ்வாறு தேனை சேகரிக்குமோ அதேப் போல் இவர் காங்கிரசு கட்சியில் நுழைந்து

அரசியல் அனுபவத்தைச் சேகரித்துக் கொண்டாடார். இவரைப்பற்றி நாம் முழுமையாக பேசவேண்டும் என்றால் கடலுக்கு எப்படி எல்லையில்லையோ அதேப்போல் இவருடைய செயலுக்கும் எல்லையில்லை.

இவர் ஒரு எளிமையானவர், பண்பாளர். ஆப்பழுக்கற்ற உள்ளமும் அணுவலவும் குறைசொல்ல முடியாத நேர்மை உடையவர். சுயநலமற்ற பெருந்தலைவர். மக்கள் சேவைக்காகவே தம்மை அர்பணித்துக் கொண்டார். மக்களின் பேரபிமானத்தைப் பெற்றவர். தனக்குக் கிடைக்காத கல்வி நம் நாட்டு மக்களுக்குக் கிடைக்கவேண்டும் என்ற கொள்கை கொண்டவர்.

இப்படிப்பட்டத் தலைவரைப்பற்றி பேச நேரமில்லையென்றாலும், கொடுத்த நேரத்தைப் பயன்படுத்தி நான்கூறிய செய்திகளில் தவறு இருந்தால் மன்னித்து எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்த அனைவருக்கும் நன்றியைக் கூறி என் உரையை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

**நன்றி ! வணக்கம்!**